


திருக்கோவிலூர் கபிலர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி நூற்றாண்டு விழாவில் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி கலந்து கொண்டு கபிலர் அவர்களின் திருவுருவச் சிலை மற்றும் நினைவு தூண்களை திறந்து வைத்து வாழ்த்துரை வழங்கினார். மாவட்ட ஆட்சியர் பிரசாந்த், விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயசந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் மு.தங்கம், மாவட்ட துணைச் செயலாளர்கள் டி.என்.முருகன், தயா. இளந்திரையன், இரா.கற்பகம், செயற்குழு உறுப்பினர் டி.செல்வராஜ், இந்திய கம்யூனிஸ்ட் ஏ.வி.சரவணன், நகரச் செயலாளர் கோபிகிருஷ்ணன், ஒன்றிய செயலாளர்கள் ஜி.ரவிச்சந்திரன், பி.வி.ஆர்.சு.விசுவநாதன், ஒன்றிய குழு தலைவர் தனலட்சுமி உமேஷ்வரன், ஓம் சிவ சக்திவேல், பேரூராட்சி செயலாளர் சுந்தரமூர்த்தி, நகர மன்ற துணை தலைவர் உமாமகேஸ்வரி குணா, மாவட்ட பிரதிநிதி சடகோபன், நகர மன்ற உறுப்பினர்கள் கோவிந்த், சக்தி, வெங்கடேசன், பூபதி, தங்கராஜ், கந்தன் பாபு, வெங்கட், சரவணன், ஜெகன், பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் சண்முகம், நகர நிர்வாகிகள் கண்ணன், சங்கர், அண்ணாதுரை , இளைஞர் அணி பாலமுருகன், நவநீதகிருஷ்ணன், வழக்கறிஞர் நிஜாம், பள்ளி கல்வி துறை நிர்வாகிகள், அரசு அதிகாரிகள், தலைமை ஆசிரியர் உள்ளிட்ட ஆசிரியர் பெருமக்கள், மாணவர்கள் பலர் கலந்துகொண்டார்கள்.





திருப்பூர் மாநகராட்சி, புதிய பேருந்து நிலையத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகத்தின் சார்பில் புதிய அரசுப் பேருந்துகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொடியசைத்து துவக்கி வைத்து பேருந்து பயணம் செய்தனர். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், மாவட்டக் கழக செயலாளர்கள் திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், மாநகராட்சி 4ம் மண்டலக்குழுத் தலைவர் இல. பத்மநாபன், மாநகர கழக செயலாளர்கள் மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், டி.கே.டி.மு.நாகராசன், மாநகராட்சி ஆணையாளர் பவன்குமார் ஜி.கிரியப்பனவர், (4ஆம் மண்டலத்தலைவர் தம்பி கோவிந்தராஜ், பகுதி கழக செயலாளர்கள் கொ.ராமதாஸ், வெ.ஜோதி, போலார் இரா. சம்பத்குமார், மு.க.உசேன் உள்பட மாவட்ட, மாநகர, வட்டக் கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் உள்ளனர்.

## திருவெறும்பூர் எறும்பீஸ்வரர் திருக்கோயிலில்

# ரூ. 5.61 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் திருப்பணிகள்!

## அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு - அன்பில் மகேஸ் பொய்யாமொழி நேரில் ஆய்வு!

திருச்சி, ஜூலை 22-

இந்து சமய அறநிலையத் துறை, தனது ஆளுகைக்குட்பட்ட தொன்மை வாய்ந்த திருக்கோயில்களில் பழமை மாறாமல் திருப்பணிகள் மேற்கொள்ளுதல், குடமுழுக்கு நடத்துதல், திருக்குளங்கள் மற்றும் திருத்தேர் சீரமைத்தல், ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து திருக்கோயில் சொத்துக்களை மீட்டெடுத்தல், பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயில் வருவாய் இனங்களை பெருக்குதல் போன்ற பணிகளை செம்மையாக மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில் தொன்மை வாய்ந்த திருகோயில்களில் ஒன்றான திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் அருள்மிகு எறும்பீஸ்வரர் திருகோயிலானது இந்திய தொல்லியல் துறை மற்றும் இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

இத்திருக்கோயிலின் திருக்குளத்தை ரூ. 4 கோடி மதிப்பீட்டில் சீரமைத்திடவும், ரூ. 1.61 கோடி மதிப்பீட்டில் விநாயகர் சன்னதி முன் மண்டபம், செயல் அலுவலர் அலுவலகம், வாகன மண்டபம், மற்றும் உணவருந்தும் கூடம், பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்கிடும் வகையில் கழிப்பிடம் மற்றும் குளியலறை வசதிகள், வாகன நிறுத்துமிடம் என மொத்தம் ரூ. 5.61 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொள்ள முன்மொழிவுகள் அனுப்பட்டு, பணிகளை மேற்கொள்வதற்கான ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு மற்றும் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் நேற்று முன்தினம் திருக்கோயிலுக்கு வருகை தந்து மேற்கொள்ளப்படவுள்ள திருக்குளத் திருப் பணிகள் மற்றும் இதர திருப்பணிகள் குறித்து ஆய்வு செய்து, உரிய அனுமதிகளை பெற்று திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு இடையூறு ஏற்படா வண்ணம் பணிகளை மேற்கொள்வது குறித் தும், குறித்த காலத்திற்குள் பணிகளை விரைந்து முடித்து. குடமுழுக்கு நடத்திட தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்தும் அறிவுரைகளை வழங்கினர்.

இந்த ஆய்வின் போது இந்து சமய அறநிலையத் துறை மண்டல இணை ஆணையர் அ.இரா.பிரகாஷ், உதவி ஆணையர்கள் ஆ.ரவிச்சந்திரன், ம.லட்சுமணன், செயற்பொறியாளர் மோகன், மாநகராட்சி மன்ற உறுப்பினர் சிவக்குமார், திருக்கோயில் செயல் அலுவலர் திருமதி இரா. வித்யா மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## முதுமலை யானைகள் காப்பகம்

# 3 நாட்களுக்கு மூடப்படுவதாக அறிவிப்பு!

நீலகிரி, ஜூலை 22-

கனமழை காரணமாக முதுமலை யானைகள் காப்பகம் 3 நாட்களுக்கு மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டம் முதுமலை புலிகள் காப்பகத்தின் தெப்பக்காடு பகுதியில், தமிழ்நாடு வனத்துறையினர் 1927ஆம் ஆண்டு முதல் யானைகள் முகாம் நடத்தி வருகின்றனர். இது ஆசியாவின் பழமையான யானைகள் முகாம்களில் ஒன்று. இந்த முகாம்களில் யானைகள் பராமரிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகிறது. காப்பகத்தில் உள்ள யானைகளை காண பல்வேறு நாடுகளிலிருந்தும், ஊர்களிலிருந்தும் பொது மக்கள் வந்து செல்வர்.

இந்த நிலையில் நீலகிரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக கன மழை பெய்து வருகிறது. இதனால் பல்வேறு பகுதிகளில் நிலச்சரிவு உள்ளிட்ட பல்வேறு பாதிப்புகள் ஏற்பட்டு வருகின்றன. அந்த வகையில் கனமழை காரணமாக முதுமலை யானைகள் காப்பகம் 3 நாட்களுக்கு (ஜூலை 22) மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மின்சாரம் துண்டிப்பு, குடிநீர் தட்டுப்பாடு, மரங்கள் விழுவது ஆகியவற்றால் சுற்றுலாப் பயணிகளுக்கு வாகன சவாரி நிறுத்தப்படுவதுடன், யானை முகாமும் மூடப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மக்களவை அலுவல்

# ஆலோசனைக் குழுவில் தயாநிதிமாறன்!

## மக்களவைச் செயலகம் அறிவிப்பு !

**புதுடெல்லி, ஜூலை 22-**

**மக்களவை அலுவல் ஆலோசனைக் குழுவில் உறுப்பினராக மக்களவைக் கழகக் குழுத் துணைத் தலைவர் தயாநிதி மாறன் அவர்கள் நியமிக்கப் பட்டுள்ளார்.**

இதற்கான உத்தரவை மக்களவைச் செயலகம் பிறப்பித்துள்ளது.

இக்குழு மக்களவைக் கூட்டங்களை நடத்துவது, கேள்வி நேரம் மற்றும் மசோதாக்கள் கொண்டு வருதல் குறித்து ஆலோசனைகள் வழங்கும்.



இக்குழுவில் இடம் பெற்றிருப்பவர்கள் வருமாறு:-

1. தயாநிதி மாறன், 2. சுதீப் பாண்ட்யோபாத்தியாயா, 3.பி.பி. சௌத்திரி, 4.லாவு ஸ்ரீ கிருஷ்ணா தேவராயலு, 5.ஸ்ரீ கௌராவ் கோகாய், 6.டாக்டர் ரிஷி காண்ட்துபே, 7.டாக்டர் சஞ்சய் ஜெய்ஸ்வால், 8.ஸ்ரீ டிலேஸ்வரர் காமெய்ட், 9.ஸ்ரீபர்ட்ரு ஹரி மெஹ்தாப், 10.ஸ்ரீ பாய்ஜாயந்த் பண்டா, 11. ஸ்ரீ அரவிந்த்கன்பத்சாவண்ட், 12.ஸ்ரீகொடிக்குன்னில் சுரேஷ், 13.ஸ்ரீ அனுராக்சிங் தாக்கூர், 14.ஸ்ரீ லால்ஜி வர்மா.

இக்குழுவின் தலைவராக மக்களவைத் தலைவர் ஓம்பிர்லா செயல்படுவார் என்று மக்களவைச் செயலகம் தெரிவித்துள்ளது.

## 'அம்மா' உணவகத்தை ஆய்வு செய்த முதல்வரின் பெருந்தன்மையைப் பாராட்ட மனமின்றி

# பொறாமையிலும் ஆற்றாமையிலும் புலம்புகிறார் எடப்பாடி பழனிச்சாமி!

## சென்னை மேயர் பிரியா ராஜன்- 'எக்ஸ்' வலைதளப் பதிவு!



**சென்னை, ஜூலை 22-**

**அம்மா உணவகத்தை ஆய்வு செய்த முதலமைச்சரின் பெருந் தன்மையை பாராட்ட மனமின்றி பொறாமையிலும் ஆற்றாமையிலும் எதிர்க்கட்சித் தலைவர் புலம்பித் தவிக்கிறார் என சென்னை மேயர் பிரியா ராஜன் 'எக்ஸ்' தளப் பதிவில் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

அவரது பதிவு வருமாறு:

கழக ஆட்சியில் சிறப்பாகச் செயல்பட்டு வரும் அம்மா உணவகங்களின் செயல்பாட்டை ஆய்வு செய்த முதலமைச்சர் அவர்களின் பெருந்தன்மையை பாராட்ட எதிர்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமிக்கு மனமில்லை!

கட்சி மாச்சரியங்களுக்கு அப்பாற்பட்டு தமிழ்நாட்டின் தனிப் பெருந்தலைவராக, மக்கள் நலன் ஒன்றையே மனதில் வைத்து நாளும் தொண்டாற்றும் மனிதநேயராக முதலமைச்சர் அவர்கள் திகழ்கிறார்கள்;

அவரது அகராதியில் அரசியல் காழ்ப்புணர்வு என்ற சொல்லோ, சிறுமதியோ ஒருநாளும் இருந்தது இல்லை.

தி.மு.க. அரசால் தொடங்கப்பட்டது என்பதற்காகவே புதிய தலைமைச் செயலகம் உட்பட அ.தி.மு.க. ஆட்சியில் முடக்கப்பட்ட திட்டங்கள் எத்தனை எத்தனை என்பதை மக்கள் அறிவர். அதனைப் பற்றி கொஞ்சமும் கூச்சமின்றி பொறாமையிலும் ஆற்றாமையிலும் எதிர்க்கட்சித் தலைவர் புலம்பித் தவிக்கிறார்.

இவ்வாறு அப்பதிவில் மேயர் பிரியாராஜன் குறிப்பிட்டுள்ளார்.



விக்கிரவாண்டி பேரூராட்சி அ.தி.மு.க 3வது வார்டு பேரூராட்சி கவுன்சிலர், வார்டு செயலாளர் ரமேஷ். விழுப்புரம் தெற்கு மாவட்ட செயலாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி முன்னிலையில் கழகத்தில் இணைத்துக் கொண்டார்.விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயசந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாவட்ட துணை செயலாளர் தயா. இளந்திரையன், பேரூர் செயலாளர் நயினா முகமது, பேரூராட்சி தலைவர் அப்துல் சலாம், நகர செயலாளர் இரா.சக்கரை, ஒன்றிய செயலாளர்கள் ஜி.ரவிசந்திரன், தே.முருகவேல், நகர பொருளாளர் என்.என்.இளங்கோ,மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் செ.தினகரன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பா.ரீ வினோத், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ப.அன்பரசு, மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் கோல்டு வெங்கடேசன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் ஆர்.பி.பரத், மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## திருநெல்வேலி கிழக்கு மாவட்டம்

# பாளையங்கோட்டை வடக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

திருநெல்வேலி கிழக்கு மாவட்டம், பாளையங்கோட்டை வடக்கு ஒன்றியச் செயலாளர் வேலன்குளம் எம்.முருகன் அவர்கள் மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற வேலன்குளம் **எம்.கண்ணன்,** *(75, நடுத்தெரு, வேலன்குளம், மேலப்புத்தனேரி ஊராட்சி, திருநெல்வேலி மாவட்டம் - 627351)* அவர்கள் பாளையங்கோட்டை வடக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 20.07.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



சென்னையில் இருந்து காணொளி காட்சி வாயிலாக தமிழக முதல்வர்,கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கள்ளக்குறிச்சி மாவட்டம் ரிஷிவந்தியம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கீழ்பாடி ஊராட்சியில் நபார்டு திட்டத்தின் கீழ் ரூபாய் 1 கோடியே 15 லட்சம் மதிப்பீட்டில் 6 வகுப்பறைகளுடன் கூடிய புதிய கட்டிடத்தை திறந்து வைத்தார்கள்,இந்த நிகழ்வில் தெற்கு மாவட்ட கழக செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ கலந்துகொண்டு சிறப்பித்தார்,இதில் அரசு அதிகாரிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள்,ஆசிரியர்கள்,மாணவ மாணவியர்கள்,பொதுமக்கள் மற்றும் மாவட்ட ஒன்றிய கிளை கழக நிர்வாகிகள் பலர் உடன் கலந்து கொண்டனர்.




கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம் சங்கராபுரம் சட்டமன்ற தொகுதி மூக்கனூர் பஞ்சாயத்து உலகுடையாம்பட்டு கிராமத்தில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருத்துவ துறை சார்பாக கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம் சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் சங்கராபுரம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் தா.உதயசூரியன் கலந்துகொண்டு நிகழ்வை துவக்கி வைத்தார்.

# ஒழுங்கு நடவடிக்கை!

## தலைமைக் கழக அறிவிப்பு!

தூத்துக்குடி வடக்கு மாவட்டம், தூத்துக்குடி மாநகர விவசாயத் தொழிலாளர் அணி அமைப்பாளர் எஸ்.வி.எஸ்.முத்துவேல் அவர்கள் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 20.07.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



தஞ்சாவூர் மாவட்டம் அரண்மனை வளாகத்தில் மாவட்ட நிர்வாகம் மற்றும் பொது நூலக இயக்ககம் சார்பில் மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன் தலைமையில் தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, தஞ்சாவூர் சட்டமன்ற உறுப்பினர் டி.கே.ஜி.நீலமேகம் ஆகியோர் முன்னிலையில் தஞ்சாவூர் புத்தகத் திருவிழா அரங்கினை 19.07.2024 அன்று திறந்து வைத்து நடமாடும் புத்தக திருவிழா பேருந்தினை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். தஞ்சாவூர் மாநகராட்சி மேயர் சண்.இராமநாதன், கும்பகோணம் மாநகராட்சி மேயர் க.சரவணன், மாநகராட்சி துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி அவர்கள் மற்றும் பலர் உடன் உள்ளனர்.